
# பெரட்டுக்களம்

பகிரல் - நண்பர்களுக்கிடையில் மட்டும்

களம் : 01 (மே 2013)



வெளியீடு : மலையக சமூக ஆய்வு மையம்

# பெரட்டுக்களம்

களம் : 01 (மே 2013)
தொடர்புகளுக்கு : upcosorec@yahoo.com
: 071 4806035, 071 4903509
அட்டையில் : சிவனு லட்சுமணன்

## புதிய பெரட்டு

மலையக சமூக ஆய்வு மையம் **பெரட்டுக்களம்** கையேடு ஊடாக உங்களை சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றது. அதே சமயம் புதிய பெரட்டுக்களத்திற்கு உங்களை அழைப்பதிலும் பெருமிதம் கொள்கின்றது.

அது என்ன பழைய பெரட்டு? புதிய பெரட்டு? நமது மலையக சமூகம் கொட்டும் பனியிலும் அதிகாலையில் பெரட்டு தப்பின் சத்தத்தை கேட்டதும் உண்டும், உண்ணாமலும், குடித்தும் குடிக்காமலும், குழந்தைக்கு பால் கொடுத்தும், கொடுக்காமலும், அவசர அவசரமாக பெரட்டுக் களத்திற்கு ஓடி வந்து தம் உழைப்பையும், உதிரத்தையும் யாருக்காகவோ வழங்கி நிற்பது பழைய பெரட்டு களமாகின்றது.

மாறாக ஓர் உழைக்கும் மக்களின் நலனிலிருந்து அந்நியமுறாமல் மலையக சமூகத்தின் மாற்றத்தை நோக்கி பயணிப்பதே புதிய **பெரட்டுக்களமாகும்.** நமது அரசியல், சமூக, நிறுவன எல்லைகளை கடந்து மலையக மக்கள் புதிய பெரட்டில் அணி திரள வேண்டிய காலத்தின் காட்டாயத்தின் முன் நிற்கின்றோம். இல்லையெனின், எமது வாழ்விடம் மலையகத்துக்கே உரித்தான இனத்துவ அடையாளம், அரசியல் எதிர்காலம், அடிப்படை உரிமைகள் என்பன இழந்து முகவரியற்றவர்களாகி விடுவோம்.

இதற்கான திட்டமிட்ட செயற்திட்டம் மறைமுகமாகவும். நேரடியாகவும் அதிகார வர்க்கத்தினரால் மிக கட்சிதமாக எம்மவர்களின் உதவியோடு முன்னெடுக்கப்படுவதே கவலையளிக்கின்றது.

எம்மத்தியில் காணப்படும் புல்லுருவிகளை அடையாளம் கண்டு பிடுங்கி எறியவும், **"மலையகத்தவர்"** எனும் இனத்துவ அடையாளத்தை தக்க வைத்து ஜனநாயக ரீதியில் வாழ்வுரிமையை பெற்றிட புதிய பெரட்டில் அணி வகுப்போம்.

இல்லையெனில், எமது அமைதியே எமது அழிவை உறுதி செய்து விடும் எனும் எச்சரிகையினையும் **பெரட்டுக்களம்** விடுக்கின்றது. அத்தோடு தொழிலாளர் மாதமான இம் மேயில் தொழிலாளர் உரிமைகளுக்கான போராட்டத்தில் பங்கு பற்றிய அனைவரையும் நினைவு கூறுவதோடு, இப் போராட்டங்களில் உயிர் நீத்தவர்களையும், மலையத்திற்காக உயிர் தியாகம் புரிந்த அனைவரையும் உணர்வுபூர்வமாக நினைவு கூறுவதோடு இம் மாதம் 11ஆம் திகதி சிவனு லட்சுமணனின் நினைவு நாள் என்பதையும் மனதில் இருத்துவோம்.

**மலையக சுதந்திர இனமாக வாழ்வோம், வளர்வோம் !**

**ஆசிரியர் குழு**

# உலகத் தொழிலாளர் தின வரலாற்றின் நினைவலைகள்

மு. ஆஸாத்

18ம் நூற்றாண்டின் இறுதிக் காலப் பகுதி ஏற்றி வைக்கப்பட்ட தொழிலாளிகளின் உரிமைப் போராட்ட தீபம் 19 நூற்றாண்டின் ஆரம்பத்தின் சுடர்விடும் தொழிலாளின் போராட்டமாக வளர்ச்சியடையத் தொடங்கியது. இதில் வேலைக்கேற்ற நேரமும், நேரத்திற்கேற்ற கூலியும் முக்கிய இடம் பிடித்தது. இதற்கு முக்கிய காரணம் உற்பத்தி நிறுவனங்களாக காணப்பட்ட தொழில் நிறுவனங்களின் ஒரு தொழிலாளி 12 முதல் 18 மணித்தியாலங்கள் வரை உழைக்க வேண்டும் என கம்பனிகளால் நிர்ப்பந்திக்கப்பட்டது முக்கிய அம்சமாகும்.

இதற்கு முன் 10 மணித்தியாலம் மட்டுமே என்ற முக்கிய கோரிக்கையை முன் வைத்து ஐரோப்பா எங்கும் பரவிய இந்த போராட்ட தீயானது 1830ம் ஆண்டு பிரான்ஸ் நெசவு ஆலைகளில் 15 மணித்தியாலம் உழைக்க வேண்டி ஏற்பட்டது. இதற்கு எதிர்ப்பாக 1835ம் ஆண்டு ஜனநாயகம் அல்லது மரணம் என்ற போராட்ட அமைப்பினது போராட்டமானது துரதிஸ்டவசமாக தோல்வியில் முடிந்தது.

இதனைத் தொடர்ந்து அவுஸ்திரேலியாவில் மெல்போன் நகரில் கட்டிட தொழிலாளிகள் 8 மணிநேரம் மட்டுமே தங்களால் உழைக்க முடியும் என்ற கோரிக்கையை முன்வைத்து போராட்டத்தினை முன் எடுத்தனர் இந்த போராட்டம் 1856 ம் ஆண்டு கட்டிட தொழிலாளிகளுக்கு சாதகமாக நிறைவேறின. இவ்வாறு அவுஸ்தி ரேலியர்களால் வென்று எடுக்கப்பட்ட 8 மணிநேர வேலை என்ற உரிமையை விட்டுக்கொடுக்காத முதலாளி வர்க்கம் தொடர்ச்சியாக தொழிலாளர்களை அடிமைப்படுத்தி வரத் தொடங்கின.

இந்த கால கட்டத்தின் ரஷ்யாவை ஆண்ட சார்ஸ் மன்னன் 1895 - 1899 காலப்பகுதியில் தொழிலாளிகளை அடக்கு முறைக்கு உட்படுத்தி வந்த காலப்பகுதியில் 1896ம் ஆண்டு தொழிலாளிகளின் தலைவர்களின் ஒருவரான லெனின் என்பவரால் ஏப்ரல் மாத காலத்தில் தொழிலாளின் விமோசனத்துக்காக மே மாத எதிர்ப்பு பிரசாரம் என்ற துண்டுப் பிரசுரத்தை தொழிலாளிகளின் உரிமைகளை வென்று எடுப்பதற்காக எழுதத் தொடங்கினர். இந்த துண்டுபிரசுரம் போராட்டமானது தொழிலாளிகளின் பொருளாதார போராட்டமாக உருவாகி காலப் போக்கில் அரசியல் போராட்டமாக வளரத் தொடங்கியது.

இந்த 8 மணிநேர வேலை நேரமானது நேரத்திற்கேற்ற வேதனம் என்ற கோசஷத்துடன் ரஷ்யா முழுவதும் தொழிலாளிகளின் போராட்டம் வேகமாக வளரத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து அமெரிக்காவில் 1832ம் ஆண்டு போஸ்டெனில் கப்பலில் பணிபுரிந்த தச்சுத் தொழிலாளர் 10 மணி நேர வேலை என்ற போராட்டத்தை முன் வைத்தனர். இதனைத் தொடர்ந்து 1835 பில்மாப்பியாவில் பொன்சேயாவில் நிலக்கரி சுரங்க தொழிலாளர்களும் இரவு பகல் தொழிலாளர்களும் தனது போராட்டத்தை முன் வைத்தனர். இதனைத் தொடர்ந்து அமெரிக்கா தொழிலாளர் கூட்டமைப்பு என்ற இயக்கம் மே 1ம் திகதி 1886ம் ஆண்டு நாடு தழுவிய வேலை நிறுத்தப் போராட்டத்தை அழைப்பு விடுத்தன. தொழிற்சாலைகளில் காணப்பட்ட தொழில் மையங்களான நியூயோர்க், சிகாகோ, பிடோல்பியா, மில்விக்கி, இக்கிலாண்டி, பல்மிமோர் ஆகிய தொழிற்சாலைகளில் வேலை செய்த 3 இலட்சத்து ஐம்பது ஆயிரம் தொழிலாளர்களும் 1200 நிர்வாக தொழிலாளர்களும் சிக்காகோவில் எழுபதாயிரம் உழைப்பாளிகளும் தங்களின் உரிமைப் போராட்டத்துக்காக களத்தில் குதித்தனர்.

சிக்காகோ நகரத்தின் ஏற்பட்ட எழுச்சியில் 1886ம் ஆண்டு மே 3ம் திகதி அன்று மெக்கார்மிக் நாபர் வளடிங் மெபில் நிறுவனத்தில் 3000 கம்பனி விற்கப்பட்டதற்கும் மூலகாரணமாக இந்த தொழிலாளிகளின் உரிமைப் போராட்டம் காரணமாக அமைந்தது. இந்த நிறுவனம்

விற்கப்பட்டதை பொறுத்துக்கொள்ள முடியாத ஆளும் வர்க்கம் 1886ம் ஆண்டு சிக்காகோ எழுச்சியில் பங்கு கொண்ட 7 பேருக்கு சட்ட விரோதமான குற்றச்சாட்டின் பேரில் தூக்குத் தண்டனை தீர்ப்பு வழங்கியது. இதனைத் தொடர்ந்து 1887ம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ம் திகதி தொழிலாளியின் தலைவர்களான ஆகஸ்ட் ஸ்பைஸ், அல்போர்ட் பார்சன்ஸ், அடொல்ப் பிஸ்ஷர், ஜோர்ஜ் ஏங்கள் ஆகியோருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. இந்த தொழிலாளிகளின் தலைவர்கள் தூக்கில் இடப்பட்ட அமெரிக்க தியாகிகளின் மே 1ம் திகதி தொழிலாளியின் தலைவர்களின் நினைவு தினமாகவும் உழைப்பவர்களின் தினமாகவும் மே மாதம் 1ம் திகதி வரவாற்றில் இடம் பிடித்தது. 1887ம் ஆண்டு தொழிலாளியின் தலைவர்கள் தூக்கில் இடப்பட்டதை தொடர்ந்து 1889ம் ஆண்டு ஜுலை மாதம் 14 ம் திகதி பாரிசின் சோசலி தொழிலாளிகளை ஒற்றுமைப்படுத்தி சர்வதேச தொழிலாளர் பாராளுமன்றம் அமைக்கப்பட்டது. இதில் 18 நாடுகளும் 400 பிரதிநிதிகளும் இதில் இயங்கும் தொழிலாளியின் தலைவர்களாக பிரக்டிக் ஏன்கில்ஸ், லெனின், காள்மார்க்ஸ் ஆகியோர் உரையாற்றிய உடன் 8 மணிநேர வேலை நேரமகவும் 1890 மே 1ம் திகதியே அனைத்து உலகமும் மே தினமாக கொண்டாடும் படி பிரகடணப்படுத்தின. இந்தியாவில் சென்னையில் மனோ சிங்காரவேலர் 1932ம் ஆண்டு சென்னையில் வயல்குடான் கடற்கரையில் மே தினத்தை நடத்தனார்.

மலையகத்தின் தொழிலாளியின் உரிமைகள் இரண்டு நூற்றாண்டுகளைக் கடந்தும் மறுக்கப்பட்டு மாட்டுத் தொட்டில்களுக்கு ஒப்பான இருட்டு அறைகளில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டு பெருந்தோட்டத்துறை தோட்டங்களில் வேலை செய்யும் உழைப்பாளிகள் வேலைக்கேற்ற வேதனம் இன்றி சுகாதார, கல்வி, அரசியல் பொருளாதாரம் அனைத்து துறைகளிலும் பின் தள்ளப்பட்டு தோட்டக்காட்டான் என்ற பெயர்களாலும் அடிமைப்படுத்தப்பட்டு வாழும் இந்த சமுதாயத்தின் தலைமைப் பொறுப்புகளை ஏற்றுள்ள தொழிற்சங்க வாதிகளும், தொழிற்சங்கங்களும் தொழிலாளர்களிடம் இருந்து மாதம் மாதம் அறவிடப்படும் தொழிற்சங்க கட்டணங்கள் அதிகரிப்பதற்கும் தங்கள் தங்கள் தொழற்சங்கத்தின் ஊடாக வாக்கு வங்கியை சரி பார்த்து கொள்வதற்கும், முதலாம் திகதி தங்களுடைய பிராந்திய தொழிற்சங்க தலைவர்களின் ஊடாக தங்களின் கட்சிக் கொடியை உயர்த்தியும் தாழ்த்தியும் ஊடாக இலவச போக்குவரத்துகளை ஏற்பாடு செய்து பிரதான நகரங்களில் இந்திய பாடகர்களை கொண்டு வந்து கூத்தடித்து உன்னதமான மே தினத்தை தொழிலாளர்களுக்கு தெரிவு படுத்தாமல் மலுங்கடிப்பதன் ஊடாக தாங்கள் தொழிற்சங்க தலைவர்கள் என மார்தட்டி கொள்கிறார்கள். வருங்கால விடியலில் இந்த தொழிற்சங்க வாதிகள் தொழிற்சங்கள் உன்னதமான தொழிலாளிகளை ஏமாற்றாமல் உலக வரலாற்றில் உருவாக்கப்பட்ட இந்த மே தினத்தை கொச்சைப்படுத்தாமல் உண்மையை உண்மையாக வெளிக்காட்ட வேண்டுமென இனிவரும் நாட்களின் விடியலை உருவாக்க வேண்டுமென இந்த தொழிலாளர் தினமான மே 1ம் திகதி அமைய வேண்டும். மேலும் மே தின விழா வெற்றி விழாவா? தோல்வி விழாவா? வெற்றிவிழாவாக்க செய்ய வேண்டியவை.

- தொழிலாளர்களுக்கான தலைவர்கள் உருவாக்கப்பட வேண்டும்.
- நிலம் சார் உரிமைகளும், தொழில்சார் உரிமைகளும் வென்றெடுக்கப்பட வேண்டும்.
- தொழில் பாதுகாப்பு உறுதி செய்யப்படவேண்டும்.
- ஏனைய தொழிலாளர் வர்க்கத்தினருடனான உறவு கட்டியெழுப்பப்பட வேண்டும்.
- அடிப்படை உரிமைகள் தொடர்பான போராட்டங்கள் ஒன்றிணைக்கப் படவேண்டும்.
- தொழிலாளரைக் காட்டிக் கொடுக்கும் தலைமைத்துவங்கள்
  சமூகத் திலிருந்து அகற்றப்படவேண்டும். இதற்கான மக்கள் சக்தியை உருவாக்குவதில் தான் வெற்றி தங்கியுள்ளது. வெற்றியின் மக்களாக வாழவும், வளரவும்,
  உழைப்பின் மக்களாக ஒன்றிணைவோம்.

# மலையக தேசியம் : சவால்களும் தீர்வுகளும்

## (ஓர் அறிமுக குறிப்பு)

– சிவம் பிரபாகரன் –

மலையக அரசியலை நோக்குகின்ற போது எழுகின்ற பிரதான வினா அது தேசிய இன அரசியலா அல்லது வர்க்க நலன் சார்ந்த தொழிற்சங்க அரசியலா என்பதாகும்.

தேசியம் எனும் பொழுது தம்மை தாங்களே ஆளத் தகுதியுள்ள வர்களின் கூட்டுணர்வை குறிக்கின்றது. பொது பிரதேசம், பொது பொருளாதாரம், பொது மொழி, பொதுக் கலாச்சாரம் என்பன இந்த கூட்டுணர்வின் பிரதான அங்கங்களாகும்.

பொதுவாக மலையகத் தமிழரின் பொரும்பாலானோர் தோட்டத் தொழிலாளர்களாகவும், அவர்களை சார்ந்தவர்களாகவும் இருப்பதனால் தொழிற்சங்க அரசியலே கூடுதலாக வெளிப்பாட்டுத் தன்மைவுடையதாக காணப்படினும், தேசிய இன அரசியலின் கூறுகளுக்கு (பொது பிரதேசம், பொருளாதாரம், தொழி, கலாசாரம்) அச்சுறுத்தல் ஏற்படுகின்ற போது தொழிற்சங்க அரசியலையும் மேவி தேசிய இன அரசியல் மேலெழும்புவதையும் அவதானிக்கலாம்.

தொழிலாளர்களின் பொருளாதார மற்றும் தொழில் நிலைமைகளை தொடர்ச்சியாக பேணுவதற்கும், முன்னேற்றப் படுவதற்குமான தொழிலா ளர்களின் அமைப்பாக தொழிற்சங்கங்கள் செயற்படுகின்ற பொழுதிலும் மலையகத் தழிழர்களை பொறுத்த வரை அவர்களின் ஆரம்பகால அரசியல் செயற்பாடுகள் கூட தொழிற்சங்கங்கள் ஊடாகவே முன்னெடுக்கப்பட்டன. ஒரு புறம் வர்க்க ஒடுக்கு முறை என்பது தோட்டத் தொழிலாளர்கள் “மலையகத் தமிழர்களாக” ஒரு தேசிய இனத்தின் பிரதான சக்தியாக விளங்குவதால் தான் இடம் பெறுகிறது.

இந்த நிலையில் மலையகத் தேசிய இன அரசியலின் ஒரு கூறாகிய தொழிற் சங்க அரசியல் முக்கியத்துவம் பெற்றது. வர்க்க ஒடுக்கு முறைக்கு எதிராக அந்த



தளத்திலிருந்து தான் போராட வேண்டும். 1800களின் நடு பகுதியில் ஐரோப்பாவில் கைத்தொழில் புரட்சியுடன் எழுச்சி பெற்ற தொழிற்சங்க நடவடிக்கைகள் படிப்படியாக ஏனைய நாடுகளுக்கும் பரவியது. இலங்கையில் 1890 களுக்கு பிற்பட்ட காலபகுதியில் தொழிற்சங்க நடவடிக்கைகள் துளிர் விட ஆரம்பித்தன.

மலையகத் தோட்டபுறத்தில் 1921 இல் சேர் பொன் அருணாசலம், பெரி சுந்தரம் ஆகியோரால் இலங்கை தொழிலாளர் சேமா அபிவிருத்தி சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. 1931 இல் அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சம்மேளனம் கோ. நடேசய்யரினால் ஆரம்பிக்கப்பட்டது. நேருவின் அலங்கை வருகையோடு 1939 ஜுலை 25ஆம் திகதி இலங்கை இந்திய காங்கிரஸ் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இதன் முதல் தலைவராக இலட்சுமணச் செட்டியாரும், இணை செயலாளர்களாக ஏ. அஸிஸ்சும். எச். எம். தேசாயும் தெரிவானார்கள். 1940 மே மாதம் இதன் தொழிற்சங்க பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

1930இற்கு பிற்பட்ட பெருந்தோட்ட துறை வரலாற்றில் லங்கா சமசமாஜ கட்சியின் அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் யூனியனினால் முப்பதுகளின் இறுதி மற்றும் நாப்பதுகளின் ஆரம்ப காலங்களில் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. 1954ல் இலங்கை இந்திய காங்கிரஸின் பெயர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (இ.தொ.க) என மாற்றப்பட்டது.

இந்த போராட்டங்கள் நிறைந்த தொழிற்சங்க வரலாறானது பல உயிர் தியாகங்கள் ஊடாகவே சாத்தியமாகியது. கோவிந்தன் (1942), வேலாயுதம், விரசாமி (1942), வைத்தியலிங்கம் (1950), எட்லின் நோனா (1953), தேவன் (1953), பீ. வெள்ளையன் (1953), காருமலை (1956), அல்விஸ் அப்புஹாமி ஆப்ரஹாம் சிங்கோ (1956), பொன்னையன், கொம்பாடி (1957), நமேசன் (1958), பிராசிஸ், ஐயாவு (1958), மாமுண்டு (1958), கே. முத்துசாமி (1959), தங்கவேலு (1960), ஆராயி, நடேசன், செல்லையா, மாரியப்பன் (1961), அழகர். ரெங்கசாமி (1964), சோனை(1967), சின்னப்பன் அந்தோணிசாமி (1968), அழகர்சாமி. ராமையா (1970), பார்வதி, கந்தையா, ஆறுமுகம், ராமசாமி (1970), சிவனு லட்சுமணன் (1977), பழனிவேல் (1980) என இந்து பட்டியல் நீண்டு செல்கின்றது.

உயிர்நீத்த தியாகிகள் பொதுவாக தொழிற்சங்க போராட்டங்களிலேயே என பட்டியலிடப்பட்ட போதும், பல இடங்களிலும் தேசிய இன அரசியலின் வெளிப்பாடாகவே இருந்துள்ளது. உதாரணமாக 1958 மார்ச் 30ம் திகதி பொகவந்தலாவையில் உயிர் நீத்த பிரான்ஸிஸ், ஐயாவு ஆகியோர் தமிழ்

மொழியை பாதுகாக்கும் வகையில் சிங்கள "ஸ்ரீ" எழுத்திற்கு எதிரான போராட்டத்தில் கொல்லப்பட்டனர். இது போன்றே இன அரசியலின் மற்றுமொரு கூறான பொது பிரதேசம் (மண் / நிலம்) துண்டாடப்படுவதை எதிர்த்தே 1977 மே 11 ஆம் நாள் சிவனு லட்சுமணன் உயிர் நீத்தார். இது போன்றே மலையகத் தமிழரின் இருப்பிற்கான போராட்டங்கள் பல வடிவங்களில். இன்று வரை தொடர்ந்த வண்ணமே உள்ளன.

இதே போன்றே தொழிலாளர்களை பெருமளவில் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட அமைப்புகளிடையே காலத்துக்கு காலம் மலையக தேசிய அரசியல் சிந்தனை எழுச்சியுற்றதையும் காணலாம். 1930களிலேயே மலையகத் தமிழரின் அரசியல், தொழிற்சங்க பிதாமகன் கோ. நடேசய்யர், தோட்டத் தொழிலாளர்கள் இலங்கை பிரஜைகள், இந்த நாட்டையே நேசிக்க வேண்டும், எனவே இந்திய தலைவர்களுக்கு "ஜே" போடுவதை கடுமையாக எதிர்தார் இலங்கைக்கு வந்த நேரு அவர்கள் நடேசய்யரை சந்திக்க விடுத்த அழைப்பையும் ஏற்க மறுத்தார். "நாங்கள் இந்த மண்ணுக்கு உரித்துடையவர்கள். எங்களுடைய பிரச்சினைகளை நாங்களே தீர்மானிக்க வேண்டியவர்கள். நேருவோ, காந்தியோ எங்களுடைய தலைவர்கள் அல்ல" என்று மலையகத் தமிழர்கள் இந்த மண்ணுக்கு உரித்துடையவர்கள் என்பதை தெளிவாக கூறினார். இந்த நிலையில் தான் பிற்காலத்தில் இந்தியாவுக்கு விசுவாசமான ஒரு தலைவராக சௌமிய மூர்த்தி தொண்டமான் வளர்த் தெடுக்கப்படுகிறார்.

மலையக தேசிய சிந்தனையின் வளர்ச்சி படியாக 1960களில் ஆரம்பத்தில் திராவிட முன்னேற்ற கழக தலைவர் இளஞ்செழியனால் இந்திய தமிழர் என்பதற்கு பதிலாக மலையகத் தழிழர் என்ற சொற்பதத்திற்கான அடிதளம் இடப்பட்டது. இதன் அடுத்தடுத்த கட்ட வளர்ச்சி படிகளாகவே மலையக இளைஞர் முன்னணி (1967). மலையக இளைஞர் பேரவை (1968) தொடர்ந்து எழுபதுகளின் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட மலையக மக்கள் இயக்கம், மலையக வெகுசன இயக்கம், மலையக ஐக்கிய இளைஞர் முன்னணி, மலையக மக்கள் முன்னணி (1989) என தொடர்ந்து அமைப்பு ரீதியான வளர்ச்சிகளை அவதானிக்கலாம். இன்றும் கூட மலைநாடு எழுத்தாளர் மன்றம் மலையக பாட்டாளிகள் கழகம், புதிய மலையகம், மலையக கல்வி அபிவிருத்தி மன்றம், மலையக சமூக ஆய்வு மையம் என மலையக இன அடையாளத்தை மையமாகக் கொண்டு இயங்கும் அமைப்புகளை காணலாம்.

இவற்றிற்கு மத்தியிலும் படித்த புத்திஜீவிகள் என்று சொல்லக் கூடிய மற்றும் இலங்கையில் உழைத்து இந்தியாவில் சேமிக்கும் வர்த்தகர்களாலும் அவர்களை சார்ந்தவர்களாலும் "மலையகத் தமிழர்" என்ற இன அடையாளத்தை சிதைக்கின்ற முயற்சிகள் தீவிரமாக முன்னெடுக்கப்

படுகின்றன. இம் முயற்சிகளுக்கு இந்திய பெரும் முதலாளிகளால் நிர்வகிக்கப்படும் பல தமிழ் ஊடகங்களும் துணை நிற்கின்றன.

மலையகத்திற்கென வலிமையானதொரு தொழிற்சங்க வரலாறு உண்டு. இன்றும் தொழிலாளரின் தொழிலில்சார் நலன்களை பேணுவதற்கும், தொழில் இருப்பிற்கும் தொழிற்சங்க அரசியல் இன்றியமையாதது. இதனை பாதுகாக்க வேண்டியது ஒட்டு மொத்த மலையக சமூகத்தினுடைய பொறுப்பாகும். அதேவேளை, இந்த தொழிற்சங்க அரசியலை தொழிலாளரின் சம்பள விடயத்துடன் மட்டும் மட்டுப்படுத்தாது, அவர்களின் ஏனைய விடயங்களையும் கையாளக் கூடிய விதத்தில் சர்வதேச தரத்திற்கு உயர்த்தப்ப பட வேண்டும். ஆனாலும் தொழிற்சங்க அரசியல் என்பது மலையகத் தமிழரின் தேசிய இன அரசியலின் ஒரு பகுதியாக மட்டுமே இருக்க முடியும். மலையக தேசிய இன அரசியல் என்றும் பிரதானமானதாக இருக்கும்.

இன்று மலையகத் தமிழரின் இன அடையாளங்கள் பெரும் அச்சுறுத்தல்களை சந்தித்து வருகின்றது. இலங்கையின் இரண்டாவது அதிகமான தமிழர் வாழும் மாவட்டமான நுவரெலியாவும், மலையகத் தமிழர் செறிந்து வாழும் மற்றுமொரு மாவட்டமான பதுளையும் உள்ளடங்களாக மத்திய, ஊவா, சப்ரகமுவ, மாகாணங்களிலும், களுத்துரை மாவட்டத்திலும் மலையகத் தமிழர் செறிவாக வாழக் கூடிய பிரதேசங்கள் மலையக தமிழரின் பொது பிரதேசத்தின் பிரதான வகி பாகத்தை கொண்டுள்ளன.

திட்டமிட்ட குடியேற்றங்கள், சட்ட விரோதக் குடியேற்றங்கள், கைத்தொழில் குடியேற்றங்கள், அபிவிருத்தி குடியேற்றங்கள், பௌத்த விகாரைகளுடனான குடியேற்றங்கள், சிங்கள விவசாய குடியேற்றங்கள், என பல வழிகளினூடாகவும் மலையகத் தமிழரின் பொது பிரதேசம் வலுவிழக்கச் செய்யப்படுகின்றது.

மலையகத் தமிழரின் பொது பொருளாதாரத்தின் பெருந்தோட்ட பயிர்ச் செய்கை பிரதான பங்கினை வகிப்பதோடு சிறு விவசாயம், கால்நடை வளர்ப்பு, சிறு வியாபாரம், மாணிக்கக்கல் அகழ்வு, சுற்றுலாத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, அரசாங்க தொழில் வாய்ப்பு என்பனவும் ஏனைய கூறுகளாக உள்ளன. இன்று பெருந்தோட்டம் கல், மரம், போன்ற வளங்கள் அகற்றப்படல், பராமரிப்பின்மை போன்ற வழிமுறைகள் ஊடாக சிதைக்கப்படுகின்றது. அதேவேளை தோட்டங்கள் சிறு சிறு துண்டுகளாக துண்டாடப்பட்டு பெரும்பான்மையினருக்கே கொடுக்கப்பட்டு சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் உருவாக்கப்படுவதால் அது மலையகத் தமிழரின் கைகளிலிருந்து பறிக்கப்படுகின்றது.

அரச வேலைவாய்பபை பொறுத்த மட்டில் ஆசிரியர் தொழில் தவிர ஏனைய அனைத்து துறைகளிலும் மலையகத் தமிழர் மீதான பாரபட்சம் தொடரவே செய்கின்றது. மலையக நகரங்களை ஏனைய இனத்தவர்கள் பெருமளவில் ஆக்கிரமித்திருப்பதுடன் சிறு விவசாய வாய்ப்புகளும் சிங்களவர்களுக்கே கூடுதலாக வழங்கப்படுகின்றது. மலையகமே இலங்கையின் பிரதான சுற்றுலா தளங்களின் ஒன்றாக இருந்த போதிலும் அதன் ஆதிக்கம் சிங்களவர்களின் கைகளிலேயே உள்ளது. இதேபோன்று மலையக பிரதேசத்திலேயே சிறந்தரக மாணிக்கக்கற்கள் அகழ்ந்தொடுக்கப்பட்ட போதிலும் அகழ்வு தொழிலாளர்களாகவே பெரும்பாலாக மலையகத் தமிழர் உள்ளனர்.

மலையகத் தமிழரின் பொது மொழியாக தமிழ்மொழி உள்ளதோடு, அவர்களுக்கே உரித்தான பொது பண்பாட்டு, கலாச்சார விழுமியங்களையும் பேணி வருகின்றனர். இவர்களின் பண்பாடும், கலாச்சாரமும் மொழியில் தங்கியுள்ளதோடு, மலையக மக்களை இணைக்கும் ஊடகமாகவும் தமிழ் மொழி உள்ளது. இன்று நடைமுறையில் தமிழ் மொழி அமுலாக்கம் என்பது கேள்வி குறியாகவே உள்ளது.

இலங்கையில் ஏனைய அனைத்து சமூகங்களுக்கும் தனியான பல்கலைக்கழகம் இருந்த போதிலும் தமது கல்வி, கலாசார விழுமியங்களை பாதுகாத்து, முன்னெடுப்பதற்கான தனியாக ஒரு பல்கலைக்கழகம் மலையகத் தமிழர்களுக்கு மட்டும் இல்லை. மலையகப் பாடசாலைகளில் வளப் பற்றாக்குறை நிலவுவதுடன், மாணவர் இடை விலகலும் மலையகப் பாடசாலைகளிலேயே அதிகமாக உள்ளது.

மேலும், படித்த மத்தியதர வர்க்கத்தினரின் இடப்பெயர்வு, இந்திய ஊடுருவல் (மாற்று தெய்வ வழிபாடு முறைகளை புகுத்துதல், ஒப்பந்தங்கள் மூலம் எண்ணிக்கையை குறைத்தல்) சாதிய அமைப்புகளின் சடுதியான மீள் நிலையாக்கம் என்பனவும் மலையக தேசத்தின் தேசிய அரசியல் உருவாக்கத்தை பாதிக்கின்றன.

திட்டமிட்ட குடும்ப கட்டுப்பாடு இன்று மலையக தேசியத்துக்கு விடுக்கப்படும் பெரும் சவாலாகும். இது 2012 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் மூலம் தெளிவாக புலனாகின்றது. கடந்த முப்பது ஆண்டுகளில் (1981 - 2011) தேசிய ரீதியான சனத் தொகை அதிகரிப்பு 36.49% மாக இருக்கும் அதே வேளை, மலையகத் தமிழர்களின் அதிகரிப்பு 2.8 % மாக மட்டுமே உள்ளது. இதுவே முஸ்லீம் சமூகத்தில் 78.6% மாகவும், சிங்கள சமூகத்தில் 38.2 % மாகவவும், இலங்கைத் தமிழரின் வளர்ச்சி 20.3% மாகவும், ஏனைய சமூகங்களின் வளர்ச்சி 7.4% மாகவும் உள்ளன.

இதேவேளை கடந்த பத்து ஆண்டுகளில் (2001-2011) ஆண்டுக்கான சராசரி சனத்தொகை வளர்ச்சி வீதம் தேசிய ரீதியில் 0.71% மாக இருக்கையில், சிங்களவர் அதிகமாக வாழும் அநுராதபுரம் மாவட்டத்தில் ஆகக் கூடுதலாக 1.33% மாகவும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 1.17% மாகவும் உள்ளன. மலையகத் தமிழர் மிகையாக வாழும் நுவரெலியா மாவட்டத்தில் ஆகக் குறைந்த வளர்ச்சி வீதம் 0.05% மாகவும், பதுளை மாவட்டத்தில் 0.39% மாகவும் உள்ளன. இதிலிருந்து எவ்வாறு திட்டமிட்ட குடும்ப கட்டுப்பாட்டின் மூலம் மலையகத் தமிழரின் இன விதாசாரம் சிதைக்கப்படுகிறது என்பது தெளிவாக புலனாகின்றது. தொடர் இன வன்செயல்கள் மூலம் மலையகத் தமிழரை அவர்களின் வாழ்விடங்களிலிருந்து விரட்டுகின்ற செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இதே போன்று சுதந்திர இலங்கையில் தொடர்ச்சியாக கொண்டுவரப்பட்ட சட்டங்களும், ஒப்பந்தங்களும் கூட மலையகத் தமிழரின் இன செறிவினை பெரிதும் பாதித்துள்ளது. 1948 ஆம் ஆண்டு பிரஜாவுரிமைச் சட்டம், 1949 ஆம் ஆண்டு இந்தியர் பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டம், 1949 ஆம் ஆண்டு தேர்தல்கள் திருத்தச் சட்டம், 1964 ஆம் ஆண்டு ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம், 1967ஆம் ஆண்டு சிறிமா சாஸ்திரி ஒப்பந்த அமுலாக்கச் சட்டம், 1974 ஆம் ஆண்டு ஸ்ரீமா - இந்திரா ஒப்பந்தம், 2012 ஆம் ஆண்டு தேர்தல்கள் திருத்தச் சட்டம் என்பன மலையகத் தமிழரின் தேசிய இருப்பை கடுமையாக பாதித்துள்ளன.



இந் நிலையிலேயே மலையக தேசிய இன அரசியலின் முக்கியத்துவம் உணர்த்தப் படுகின்றது. மலையக தேசிய இன அரசியலை முன் நகர்த்துவதற்கு முதலில் மலையகத் தமிழரின் இருப்பை பாதுகாக்கக் கூடிய விதத்தில் இலக்கு அவசியம். அந்த இலக்கை அடைவதற்கான கொள்கைகளும், கொள்கைகளை மையப் படுத்தியான நீண்ட மற்றும் குறுகிய கால வேலைத் திட்டங்கள் அவசியம். வேலைத் திட்டங்களை முன்னெடுக்கக் கூடிய அமைப்பு வடிவமும், அதற்கான ஊழியர்களின் தேவையும் அடுத்து தீர்மானித்தல் வேண்டும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக அர்ப்பணம் உள்ள தலைமையின் அவசியம் மிக முக்கிய மானதாகும்.

இறுதியாக மலையக தேசிய இன அரசியலை நேர்த்தியான முறைமையில் முன்னெடுப்பதன் ஊடாக மட்டுமே இன்று மலையக தேசியம் எதிர் கொண்டுள்ள சவால்களுக்கு முகம் கொடுத்து, அதன் அவசியத்தை நிலை நிறுத்த முடியும்.

# மலையக சமூக மறுமலர்ச்சி தொடர்பில்

## செய்யக் கூடியவைகளும் – செய்ய வேண்டியவைகளும்.

எம். ஜெயக்குமார்

மலையக அரசியல் தொழிற்சங்க வரலாற்றுப் பின்னணியினை எடுத்துக் கொண்டால் ஒரு சமூகவியல் நோக்குடன் மிக ஆழமாக சிந்தித்து அலசி ஆராய வேண்டும். இதனை ஒரு பண்பாட்டு அரசியல் கலாச்சார பண்புடன் பின்னி பிணைந்து தனக்கே உறித்தாக பண்பினை சற்றும் சிதையாது உள்ளப்படி அணுகவேண்டும். அது மட்டும் அல்லாது மலையகத்தின் மறுமலாச்சியினை நாம் ஒரு புறம் சிந்திக்க வேண்டிய தேவைப்பாட்டுடன் இன்று இருக்கின்றோம்.

மலையகத்தின் மறுமலர்ச்சி என்னும் போது முதலாவதாக மறுமலர்ச்சி என்றால் என்ன? என்று அறிந்து இருத்தல் வேண்டும். பொதுவாக மறுமலர்ச்சி என்னும் போது ஒரு கால கட்டத்தின் அரசியல் சமூக கலாசார பண்புகளுடன் பொருளாதாரம், கல்வி, சுகாதாரம் சிறந்த பொழுதுபோக்கு, விஞ்ஞானம், போன்றவற்றுடன் அத்தியாவசிய தேவைகளான உணவு, உடை, உறையுள் என்பவற்றின் இருந்து ஒரு மறுமலர்ச்சியினை கண்டு இருக்குமானால் அதாவது ஒரு மேன்மையினை கண்டுள்ளோம் என்ற நல்ல தீர்ப்பினை வழங்கும் போது அதை மறுமலர்ச்சி என்று வியாக்கியானம் கொள்ளலாம். அவ்வாறே மலையகத்தின் மறுமலர்ச்சி என்னும் போது ஆங்கிலேயர் காலத்தில் பின்ளை மடுவங்கள் ஆரம்ப பாடசாலைகள் நாளடைவில் வளர்ச்சியினை கண்டுள்ள நிலையில் மலையக மக்கள் கல்வி கற்க ஆரம்பித்தார்கள்.

அதாவது இக் கல்வி முறையில் பெரிய சவால்களை எதிர் கொள்ள வேண்டிய துர்பாக்கிய நிலைகளும் ஏற்படாமல் இல்லை. இதனை திரு. தை. துரைராஜ் அவர்கள் தனது மலையகக் கல்வி ஓர் எதிர்கால நோக்கு என்னும், கட்டுரையில் பின்வருமாறு விளக்கியுள்ளார். 1943ல் தேசிய கல்வி முறைமைக்கான ஓர் உறுதியான அடித்தளம் திரு. கன்னங்கரா அவர்களால் இடப்பட்டபோது தேசிய கல்வி முறைமையின் ஓர் அங்கமாக மலையகக் கல்வி சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இலங்கையின் தேசிய கல்வி முறைமையின் பிதாமகனான திரு. கன்னங்கரா மலையகக் கல்வியை முற்றுமுழுதாக நிராகரித்ததோடு, மலையகக் கல்வி என்பது இந்திய முகவரின் பொறுப்பு" எனவும் தட்டிக் கழித்தமை மலையக

சிறார்களுக்கு அவர் செய்த வரலாற்றுத் துரோகமாகும். மலையகக் கல்வி முறைமையை தேசிய கல்வி முறைமையின் ஓர் அங்கமாக ஏற்றுக் கொள்ள வேண்டு மென்னும் கோரிக்கையை முன்வைத்த மாத்தளை பாராளுமன்ற உறுப்பினர் திரு. அலுவிகாரரைக்கும் அக்கோரிக்கையை நிராகரித்த திரு. கன்னங்கராவுக்கும் இடையில் நடைபெற்ற விவாதம் மலையகக் கல்வி வரலாற்றில் ஒர கறைபடிந்த சம்பவமாகும் என குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு அப்பால் மலையகத்தில் 1970க்கு பின் பெருந்தோட்ட பாடசாலைகள் படிப்படியாக அரசமயப்படுத்தப்பட்டன பின்னர் அக்காலத்தில் இருந்து மலையக மக்களில் கணிசமானவர்கள் கல்வி கற்க வேண்டும் என்ற மனநிலை மாற்றத்திற்கு உள்ளானார்கள். இதனை தொடர்ந்து 14 வயதிற்கும் குறைந்த எந்த ஒரு சிறு பிள்ளையும் தொழில் செய்வதற்கு அனுமதிக்க கூடாது என்ற சட்டம் உலகளாவிய ரீதியில் ஒரு வலுவான காரணமாக அமைந்தது.

அக்காலக் கட்டத்தில் இருந்தோ அறிந்தோ, அறியாமலோ, தெரிந்தோ,... தெரியாமலோ மலையக மாணாவர்கள் பாடசாலைக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன் பின் கணிசமானவர்கள் கல்வி கற்று க.பொ. த. சாதாரண தரம் உயர்தரம் சித்தியடைந்தவர்களாக காணப்பட்டார்கள். அதனை தொடர்ந்து மலையகத்தில் தொழில் இல்லாப் பிரச்சினை புரையோடிக்கிடந்தது. இதற்கு மிக முக்கியமாக காரணம் மலையக பெருந்தோட்ட மக்களில் பெரும்பாலானவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்பட்டிருக்கவில்லை.

அதன் பின்னர் மலையகத்தில் மட்டுமல்லாது, முழு இலங்கையிலும் கலவி கற்ற இளைஞர், யுவதிகளுக்கு தொழில் இல்லா பிரச்சினை நிலவியது. இதனை மிக சாணக்கியமான முறையில் அன்றைய மறைந்த ஜனாதிபதி அவர்களாள் கையாளப்பட்டது. 1990ம் ஆண்டு நாடளாவிய ரீதியில் ஒரே நேரத்தில் 25,000, பின் 15,000 என்ற ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன. இவற்றில் அனேக மலையக பெருந்தோட்ட இளைஞர், யுவதிகளுக்கும் நியமனம் கிடைக்கப்பபெற்றது. அத்தோடு அன்று நமது நாட்டின் ஏற்பட்டிருந்த இனக்கலவரம் காரணமாக வடகிழக்கு இளைஞர், யுவதிகளுக்கு அரச உத்தியோகங்கள்

மறுக்கப்பட்ட நிலையில் அரச அடக்கு முறையும் உக்கீரம் கண்டிருந்தது. அப்போது அவர்கள் ஆயுத புரட்சிக்கு தயாரான நிலையில் நாட்டில் பொலிஸ் காவல் துறையில் ஆளணி பற்றாக்குறை ஏற்பட்டது. இதனை கருத்திற் கொண்டு மலையக இளைஞர்களுக்கு பொலிஸ் உத்தியோகம் வழங்கப்பட்டது.

இவ்வாறு தொடர்ச்சியாக மலையக பெருந்தோட்ட இளைஞர் யுவதிகளுக்கு அரச மற்றும் தனியார் துறைகளில் தொழில் கிடைக்க பெற்றுது என்றாலும் பல தசாப்தங்களை கடந்துள்ள நிலையில் எவ்விதமான சமூக மறுமலர்ச்சியினையும் கண்டு கொள்ள முடியவில்லை.

இதற்கு இன்று மலையக இளைஞர் யுவதிகள் அரச மற்றும் தனியார் துறைகளில் தொழில்கள் கிடைக்கபெற்றதும் இவர்கள் ஒரு மத்தியதர வர்க்க சிந்தனையில் அருகில் உள்ள நகர்புரங்களை நோக்கி நகர்வதினை காணக் கூடியதாக இருக்கின்றது. இவர்கள் ஏன் தான் வாழ்ந்த மண்ணை விட்டு செல்ல வேண்டும் மாறாக இவர்களுக்கு ஓர் வர்க்க நல சிந்தனை குறைவாகத்தான் இருக்கின்றது என்பது தெளிவான புலனாகின்றது. இதனை இவர்கள் கற்றுக் கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும்.

மலையக மக்கள் ஒரு தேசிய இனம் என்பது உண்மைதான். அதை ஒரு அங்கீகாரத்திக்கு கொண்டுவர வேண்டிய பாரிய பொறுப்பினை தற்போது சுமந்து கொண்டு இருக்கின்றோம். மலையக மக்கள் தற்போது தனது சமூக அடையாளத்தினை பறி கொடுத்து இருக்கும் நிலையினை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. அதனை பாதுகாத்து தக்க வைத்துக் கொள்ள வேண்டும்.

இன்று மலையக பெருந்தோட்டத்துறையின் கட்டமைப்பை எடுத்துக் கொண்டால் ஒரு இருக்கமான பொருளாதார கட்டமைப்புக்குள் எந்த வழியிலும் மறுமலர்ச்சியினை காணமுடியாதவாறு தலைமுறை தலைமுறையாக அரை அடிமைகளாக்கப்பட்டிருக்கின்றது. இது ஆங்கிலேயர் காலம் தொட்டு இருந்து வருகின்றது. இக் கட்டமைப்பினை மாற்றியமைக்க வேண்டும். அதாவது கிராம மயப்படுத்தல் வேண்டும். குடியிருப்புகளை தோட்ட நிருவாகத்திடம் இருந்து வேறுபடுத்தி அதனை நேரடியாக பிரதேச சபை நிருவாகம் அலகுகளுக்குள் கொண்டு வந்து,

குடியிருப்புகளையும் அவர்களது வீட்டு தோட்டங்களையும் அவர் அவர்களுக்கு சொந்தமாக்கி, தோட்ட தொழிலாளர்களை சுதந்திர தொழிலாளர்களாக்கி அவர்களின் உழைப்பை சுதந்திரமாக விற்க தகமை உள்ளவர்களாக்க வேண்டும். அப்போது தான் பொருளாதார ரீதியிலான ஒரு மறுமலர்ச்சியினை காணமுடியும். அது மட்டுமல்லாது பெருந்தோட்டங்களை நீண்ட கால அடிப்படையில், கூட்டுறவு முறையில் பகிர்ந்து அளித்து சிறுதோட்ட உரிமையாளர்களுக்கு வழங்குகின்ற மாணியங்களை அவர்களுக்கும் வழங்கி ஊக்குவிப்பதோடு அவர்களின் இனத்தின் அடையாளங்கள் சிதையாதவாறு பாதுகாக்க வேண்டும்.

இலங்கை நாட்டின் மலையக மக்கள் ஒரு தேசிய இனம் என்று என்னும் போது பிரதேசம், மொழி, கல்வி, கலாச்சாரம், பண்பாடு பொருளாதாரம், அவற்றோடு சமய பழக்க வழக்கங்கள், விளையாட்டு, போன்ற அனைத்து அம்சங்களும் பாதுகாக்கப்பட்டு ஒரு மலர்ச்சியினை காணும் போது இலங்கை திரு நாட்டிற்குல் மலையக தேசியம் என்றும் “இதயம் ” உயிர் வாழும்….!

## நெற்றிக் கண்


மேகம்
முத்துமிடும்
மலையகத்தின்
பசுமை தேயிலைக்கு
மத்தியிலே
பசியின்
அக்கினியில்
தீ குளித்து
அம்மனத்தோடு
கூடார கோவிலில்
குந்தியிருக்கும்
ஏமாந்த சாமிகளே
காத்திருங்கள்
மே தினத்தில்

தோரணம் கட்டியவர்கள்
இனி
தேர்தல் நாளில்
குன்றேறி வந்து
நமக்கு
கோவில் கட்டவும்
கும்பாபிஷேகம்
நடத்தவும்
மடி பிச்சை
கேட்பார்கள்
அந் நாளில்
நம்
நெற்றிக் கண்
திறப்போம்

மலைபிள்ளை

# மலையக மண்ணை மீட்டெடுத்த
# தியாகி சிவனு லட்சுமணனை நினைவுக் கூரல்

– லெனின் மதிவானம் –



"போராட்டமே வாழ்க்கை"
ஆம், மனிதனும் மனித குலமும் இயற்கையின் மூலாதார சக்திகளை எதிர்த்து நடத்தும் போராட்டமாக அது இருக்க வேண்டும். இந்த தலை சிறந்த போராட்டத்தை வர்க்க அரசாங்கமானது, மனிதனை அடிமை ப்படுத்துவதற்கான, மனிதனின் உழைப்பின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கான அருவருக் கதக்க போராட்டமாக மாற்றிவிட்டன." சக மனிதர்களின் நன்மைக்காக, இருப்புக்காக தனது உயிரைத் தியாகம் செய்த சிவனு லட்சுமணன் பற்றி நினைக்கின்ற போது மார்க்ஸிம் கார்க்கியின் மேற்குறித்த வரிகள் நினைவுக்கு வருகின்றன.

மலையக மக்களின் வரலாறும் சமூக உருவாக்கமும் மலர் தூவிய பாதையில் நடைப்பயின்றதல்ல. ஒவ்வொரு அடியும் கல்லும் முள்ளும் நிறைந்த பாதையில், அதுவும் ஒரு ஜீவ மரண போராட்டத்தின் ஊடே வளர்ந்ததொன்றாகும். எனவே இவர்களின் சராசரி வெற்றிகள் கூட நீண்ட நெடிய போராட்டத்தின் மூலம் அடையப் பெற்றதாகும். இன்று புதிதாக தோன்றிவருகின்ற மத்தியதர வர்க்கத்தின் தாக்கம், மலையகம் நாலாம் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது என்பது உண்மைதான். இந்நிலையில் மலையகம் பொறுத்த குறுந்தமிழ் தேசிய உணர்வும், பிராந்திய மேலாதிக்க உணர்வும் தலைக்காட்டுவது தவிர்க்க முடியாததொன்றாகின்றது. இருப்பினும் மலையக தேசியத்தின் முற்போக்கான பக்கத்தை விருத்தி செய்து முன்னெடுத்து செல்கின்ற மலையக மக்களுக்காக உயிர் நீத்த தியாகிகள் பற்றிய தேடலும் பதிவுகளும் அவசியமானவையாகின்றன.

இவ்வாறானதோர் சூழலில் 1977 ஆம் ஆண்டு தோட்டக் காணியை (நுவரெலியா- டெவன் பகுதியில்) பறிப்பதற்கெதிரான பொலிஸாரின் துப்பாக்கி சூட்டு சம்பவத்திற்கு இறையாகிய சிவனு லட்சுமணன் போன்ற தியாகிகள் குறித்த நினைவு கூரல் அவசியமானதாகின்றது இந்நினைவுக் கூரல் என்பது கூட வெறும் சம்பிரதாய பூர்வமான நினைவுரைகளாவோ பதிவுகளாகவோ அல்லாமல் மலையக சமூகத்தின் இருப்பை நிலை நிறுத்துவதற்கான முயற்சியாகவும் அமையும். அந்தவகையில் சிவனு லட்சுமணன் துப்பாக்கிச்சூட்டு சம்பவத்திற்கான பின்னணி பற்றி நோக்குதல் அவசியமானதாகும்.

அன்றைய சூழலில் ஆட்சியிலிருந்த ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் அதன் தலைமையில் இயங்கிய ஐக்கிய முன்னணியும் தேசிய முதலாளித்துவ

சக்தியாக விளங்கியது. வரலாற்றரங்கில் பிரவேசிக்கின்ற போது ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வைக் கொண்டிருந்ததுடன் மக்கள் சார்ந்த பண்புகளையும் அது தன்னகத்தே கொண்டிருந்தது என்பது முற்போக்கான அம்சமாகும். அதேசமயம் தமது வர்க்க நலன் காரணமாக சர்வதேச முதலாளித்து வத்திற்குள் சரணடைந்தனர். அவர்களது ஏகாதிப்பத்திய எதிர்ப்புப் பண்பும் படிப்படியாக மழுங்கியதுடன், தனக்கு ஆதரவாக பயன்பட்ட தொழிலாளர், விவசாய வர்க்கத்திற்கும் எதிராக மாறியது. திரு. பண்டாரநாயக்க இறந்த பின்னர் ஆட்சிக்கு வந்த திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க காலத்தில் இந்த பண்பு முனைப்படைந்தது.

இவ்வாறான நசிவு தரும் அரசியலின் பின்னணியில் கண்டிய பௌத்த-சிங்கள நிலபிரபுத்துவ உணர்வு முன்னிலைப்படுத்தப்பட்டது. இந்தப் பின்னணியில் திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தமது ஒரே ஆண் வாரிசான திரு. அனுரா பண்டாரநாயக்காவை பாராளுமன்ற அரியணையேற்றுவதற்காக நுவரெலியா-மஸ்கெலியா என்ற தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டதுடன், கண்டிய பௌத்த-சிங்கள உணர்வுடன் தேர்தல் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. இது தொடர்பில் மலையக சமூக ஆய்வாளரொருவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

> "அனுரா இதனை மிகவும் திறமையாகப் புரிந்து கொண்டு செயற்படுவதாக நிரூபிக்கப் போய் தனது இனவாத சொரூபத்தை வெளிப்படையாக அம்பலப்படுத்திக் கொண்டார். தன்னை ஒரு கண்டிய சிங்கள வீரன் எனக் காட்டிக் கொள்வதற்காக மலையகத் தமிழர் மீது இனவெறியைக் கக்கினார். இவருக்கு ஆதரவாக அவரது மாமனார் மற்றொரு 'கண்டிய சிங்கள வீரன்' கொப்பேகடுவ 'கண்டிய சிங்களவர்களுக்கு சொந்தமான நிலத்தை மீட்டுச் சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்குத் தடையாக தொண்டமான் குறுக்கே நின்றால் அவரையும் வெட்டிக் கூறுப்போட்டு பகிர்ந்தளிப்பேன்' என முழங்கினார். இங்கு தாக்கப்பட்டது தொண்டமான் அல்ல, மலையக தொழிலாளர்கள்"
>
> (மோகன்ராஜ். க (பி. ஏ, காதர்), 1984, ஈழ ஆய்வு மையம், ஐக்கிய இராச்சியம். பக்.154,155.)

இத்தகைய பௌத்த-சிங்கள மேலாதிக்கச் சிந்தனையின் பின்புலத்தில் மலையக மக்கள் இந்நாட்டில் அந்நிய கூலிகளென்றும் அவர்கள் இங்கு வாழ்ந்த சிங்கள மக்களின் நிலங்களை அபகரித்துக் கொண்டவர்கள் என்ற கருத்து சிங்கள மக்களிடையே அரசியல் கலாசார ரீதியாக முன்னெடுக் கப்பட்டன. இவ்வாறான அரசியல் நடவடிக்கைகளின் விளைவாக மலையக மக்களுக்கு சொந்தமான பல தோட்டக் காணிகளை பறிக்கும் நடவடிக்கைகள் பலாத்காரமான முறையில் மேற்கொள்ளப்பட்டன. பல தோட்டங்களுக்கு நில அளவையாளர்கள் சென்ற போது அதனை எதிர்த்து தோட்டத்தொழிலாளர்கள் மேற்கொண்ட கலகத்தினால் அவர்கள் பின்வாங்கினர். பல இடங்களில் தோட்டத்தொழிலாளர்கள் சிங்கள காடையர்களாலும், படையினராலும் தாக்கப்பட்டார்கள். சில தோட்டங்கள் தரிசு நிலங்களாக மாற்றப்பட்டதுடன் தொழிலாளர்கள் விரட்டியும் அடிக்கப்பட்டனர். 1976 ஆம் ஆண்டு டெல்டா சங்குவாரி தோட்டத்தில் இடம்பெற்ற சம்பவம் இதற்கு தக்க எடுத்துக்காட்டாகும்.

இத்தகைய காணிச் சுவீகரிப்பின் இன்னொரு பேரினவாத செயற்பாடாக

அமைந்ததொரு நிகழ்வுதான் 1977 அம் ஆண்டு மலையகப் பகுதியில் 7000 ஏக்கர் தேயிலைக் காணியை பறித்து நிலமற்ற சிங்கள கிராமத்தவர்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட நடிவடிக்கையாகும். தமது உழைப்புக்கான தளம் பறிமுதலாவதால் தாம் பாதிப்படைவோம் என்ற உணர்வில் தொழிற்சங்கங்களை கடந்த போராட்டங்கள் மலையகமெங்கும் எழுந்தன. அவ்வாறு டெவன் தோட்டத்தில் இடம்பெற்ற போராட்டத்தில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய சிவனு லட்சுமணனின் மரணம் (11.05.1977) விலை மதிப்பற்றது. இவர் தொழிலாளர் தேசிய சங்கத்தின் அங்கத்தவர் என்பதை பீ. ஏ. காதர், டி. அய்யாத்துரை ஆகியோர் பதிவாக்கியுள்ளனர். இப்போராட்டத்தின் மூலமாக மலையக மக்களின் காணி பறித்தெடுக்கும் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

மேலும், சிவனு லட்சுமணனின் மரணத்தை தொடர்ந்து அவரது துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை எதிர்த்து மலையகத்தில் தொழிலாளர்கள் விவசாயிகள் புத்திஜீவிகள், மாணவர்கள் என பலதரப்பட்டோர் போராட்டத்தில் ஈடுப்பட்டனர். ஹட்டனில் ஹைலன்ஸ், பொஸ்கோ கல்லூரி மாணவர்கள் செய்த ஆர்ப்பாட்டம், அவ்வாறே நாவலப்பிட்டியில் மாணவர்கள் செய்த போராட்டம் என்பன முக்கிய நிகழ்வுகளாகும். இதன் பின்னணியில் செயற்பட்ட சில ஆசிரியர்கள் அரசியல் பழிவாங்களாக 24 மணித்தியாலங்களில் இடமாற்றம் செய்யப்பட்டனர். எடுத்துக்காட்டாக நாவலப்பிட்டியில் ஆசிரியராக இருந்த தோழர் அழகலிங்கம் என்பவரின் இடமாற்றத்தைக் குறிப்பிடலாம். அந்த வகையில், இம்மண்ணை தமது உழைப்புக்கு களமாக அமைந்த நிலத்தை பாதுகாப் பதற்கான நடந்த போராட்டமும் அதில் உயிர்த் தியாகம் செய்த சிவனு லட்சுமணனின் இறப்பும் மலையக மக்களை விழிப்புக் கொள்ளச் செய்தது எனலாம்.

இதன் மறுபுறத்தில் சிவனு லட்சுமணன் இறந்த காலச் சூழ்நிலை தேர்தல் காலமாக இருந்தமை யினால் இந்த சம்பவத்தை தமது தேர்தல் வெற்றிக்குச் சாதகமாக மலையக தொழிற்சங்க தலைவர்களும், யு. என். பி. கட்சியும் பயன்படுத்திக் கொண்டன. 1977 ஆம் ஆண்டு காலப்பகுதியில், முன்னர் பதவிலியிருந்த ஐக்கிய முன்னணி அரசு மேற் கொண்ட மக்கள் விரோதச் செயற்பாடுகளை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்திய ஐக்கிய தேசியக் கட்சி சுதேச விதேச பிற்போக்குச் சக்திகளின் ஆதரவுடன் ஆட்சி பீடமேறியது. இக்காலச் சூழலில் உலகமயப் பொருளாதாரத்தை அமுலாக்கம் செய்வதற்கான முயற்சிகள் மிகத் திட்டமிடப்பட்ட வகையில் முன்னெடுக்கப்பட்டன. விவசாய நிலங்கள் கைவிடப்பட்டு சுதந்திர வர்த்தக வலயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இம் முயற்சிகள் யாவும் வெளிநாட்டு, உள்நாட்டு உயர் வர்க்கத்தினரின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாக அமைந்திருந்தன.



இவ்வகையில் பார்க்கின்ற போது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அரசாங்கம் மலையக மக்களின்

உரிமைகள் தொடர்பில் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்ததற்கு மாறாக நடைமுறையில் கண்டிய பௌத்த சிங்கள நிலபிரபுத்துவ சிந்தனைகளையே தமது அரசியல் நடவடிக்கைகளில் வெளிப்படுத்தினர். அவ்வாறே இந்நாட்டை விதேச மற்றும் உள்நாட்டு மேட்டுக்குடியினரின் சுகபோகத்திற்கும் செல்வ குவிப்பிற்காகவும் திறந்து விட்ட யு. என். பி அரசாங்கமும் மலையக மக்களுக்கு எதிராக அவர்களது இனத் தனித்துவத்தை தேசிய இனத்திற்குரிய அடையாளங்களை சிதைப்பதற்கான நடவடிக்கைகளையே மேற்கொண்டது. இச் செயற் பாடுகளுக்கு எதிராக மலையக தொழிற்சங்க அரசியல் தலைவர்கள் உணர்வுக் கொண்டிருப்பினும், அதனை இவர்கள் துளியளவும் கவனத்திலெடுக்க வில்லை என்பதை கடந்த கால நிகழ்வுகள் எண்பித்திருக்கின்றன.

இது இவ்வாறிருக்க, சிவனு லட்சுமணனின் உயிர்த்தியாகம் என்பது மக்களை உணர்வுக் கொள்ளச் செய்து தமது உரிமைகளுக்காக அவர்களை போராடத்தூண்டியது. ஏறத்தால எண்பதுகளின் தொடக்கம் வரை மலையகத்தில் ஒரு உழைக்கும் மக்கள் சார்ந்த அரசியல் உணர்வே முனைப்புப் பெற்றிருந்தது. இதில் மிக முக்கியமான ஒன்று மலையக மக்களின் குடியுரிமை அங்கீகரிக்கப்பட்டவையாகும். சிவனு லட்சுமணன் போன்றோரின் உயிர்த்தியாகத்தினால் ஏற்பட்ட ஒரு அரசியல் உணர்வே இம் மக்களின் குடியுரிமையை அங்கீகரிப்பதற்கான அகக்காரணியாகும். இன்னொரு புறத்தில் இத்தகைய அரசியல் எழுச்சிகளினால் வட-கிழக்கில் தோன்றிய இயக்கங்கள் கூட மலையக மக்களின் குடியுரிமை தொடர்பில் கவனம் எடுக்கத் தொடங்கி இருந்தன. அந்த வகையில் திம்பு பேச்சுவார்த்தையில் வட - கிழக்கு இயக்கங்களினால் முன்வைக்கப்பட்ட நான்கு கோரிக்கைகளில் ஒன்றாக மலையக மக்களின் குடியுரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை இதன் புறக்காரணியாக அமைகின்றது. அந்த வகையில் மலையக மக்கள் உழைக்கும் மந்தைகள் என்ற நிலையிலிருந்து மாறி அவர்கள் ஒரு சமூகமாக கட்டமைக்கப்பட்டதன் வளர்ச்சியை இவ்வம்சம் குறித்து நிற்கின்றது.

மலையகத்தில் இத்தகைய சமூக உருவாக்கத்தினால் தோன்றிய புதிய மத்தியதர வர்க்கம் இரண்டு குணாம்சங்களை கொண்டதாக காணப்படுகின்றது. ஒன்று உழைக்கும் மக்களிலிருந்து அந்நியப் பட்டு தனது நலனுக்காக எதையும் செய்கின்ற - அந்த உழைக்கும் மக்களையே காட்டிக் கொடுக்கின்ற துரோகச் செயலை செய்கின்ற ஒரு வர்க்கமாக பரிணமிக்கின்றது. இன்னொரு புறத்தில் உழைக்கும் மக்களின் நலனோடு தம்மை இணைத்துக் கொண்டு மலையக சமூகத்தில் மாற்றத்திற்காக செயற்படுகின்ற பிரிதொரு அணியினரையும் இம் மத்தியதர வர்க்கத்தில் காணலாம். இவர்களுடைய அரசியல், சமூக, ஸ்தாபன சார்ந்த தத்துவார்த்த பின்னணியை உருவாக்குவதில் சிவனு லட்சுமணனுடைய உயிர்தியாகம் முக்கிய பங்கினை ஆற்றி வருகின்றது.

அன்று எமது உழைப்பிற்கு களமாக இருந்த மண் பறிபோவதற்கு எதிராகவும் தமது உரிமைகளுக்காகவும் மலையகத்தில் எழுந்த போராட்டங்கள் உயிர்த்தியாகங்கள் அதனை தற்காலிகமாக தடுத்து நிறுத்திய போதிலும் காலப்போக்கில் அவை எம்மிடமிருந்து பறிபோனதாகவே காணப்படுகின்றன. இன்று மலையகத்தில் என்றும் இல்லாதவாறு குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல இயற்கை சூழலும்

நீர்விழ்ச்சிகளும் உல்லாச பிரயாணிகளின் சுகபோகத்திற்கான இடமாக மாற்றப்பட்டு வருகின்றன. மலையக பகுதிகளில் விடுதிகளும் கபானாக்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன. அபிவிருத்தி என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மேல்கொத்மலை போன்ற நிகழ்ச்சித் திட்டங்களும் ஒரு விதத்தில் மலையக மக்களின் காணிகளை பறிப்பதாகவே அமைந்திருக்கின்றது. இன்று பௌத்த, சிங்கள பேரினவாத பண்பாட்டின் பின்னணியில் மலையகத் தமிழர் சிங்கள மக்களோடு ஐக்கியபட்டு வாழ்தல் என்பதற்கு பதிலாக அவர்களின் இனத் தனித்துவத்தையும், தன்னடையாளங்களையும் இல்லாதொழிப்பதற்கான முயற்சிகளே இடம் பெற்று வருகின்றன. சிவனு லட்சுமணன் துப்பாக்கி சூட்டு சம்பவம் இடம்பெற்ற டெவன் பிரதேசம் இதற்கு தக்க எடுத்துக் காட்டாகும். ஆனால் இதுவரை சிவனு லட்சுமணனுக்கான நிவைவு சின்னமோ அல்லது கல்லறையோ கட்டப்படவில்லை என்பது துயரகரமான செய்தியாகும். இந்நினைவு சின்னங்கள் என்பது கூட சிவனு லட்சுமணனுக்கு வருடாவருடம் தெவசம் (திவசம்) கொண்டாடவோ கூடம் போடுவதற்கோ அல்ல. இன்று உலகமயமாதல் சூழலில் தன்னடை யாளங்கலோ, சுயசிந்தனையோ இல்லாதொழிக்கப்பட்டு தனது காலையே வெட்டி சூப்பு வைத்து குடிக்க முனைகின்ற தலைமுறையினர் உணர்வு பெறவும் தமது முன்னோர் நமக்காக செய்த மகத்தான போராட்டங்கள். தியாகங்கள் பற்றி அறிந்துக் கொள்வதற்காகவும் சிவனு லட்சுமணன் (போன்ற தியாகிகள்) நினைவுக் கூரப்படல் வேண்டும்.



மறுப்புறத்தில் சிவனு லட்சுமணன் போன்றோரின் தியாகத்தால் கட்டியெழுப்பட்ட மலையக மக்களின் உரிமைக்கான போராட்டமானது இன, மத மொழி, சாதி சார்ந்த போராட்டமாகவோ அல்லது குழு போராட்டமாகவோ முன்னெடுக்கப்படாமல் அது பரந்துப்பட்ட ஜனநாயக போராட்டமாக முன்னெடுக்கப்படல் வேண்டும். யாவற்றிற்கும் மேலாக மலையகத் தமிழர்களின் சுபீட்சத்திற்கான மக்கள் போராட்டமானது இலங்கையில் வாழ்ந்து வருகின்ற ஏனைய அடக்கப்பட்ட மக்களின் போராட்டங்களுடனும் முழு தேசிய விடுதலை போராட்டங்களுடனும் இணைக்கப்படல் அவசியமானதாகும். எனினும், இவர்களின் மானுட விடுதலைக்கான பயணத்தில் பல்வேறுப்பட்ட அடக்கு முறைகளும் தடைகளும் எதிர்பார்க்கப்படுகின்றன. அதேவேளை, அவற்றினை மீறி முன்னேறுவதற்கான சாத்தியக் கூறுகளும் காணப்படுகின்றன. இவற்றினை வீரியத்துடனும் நேர்மையுடனும் முன்னெடுக்கக் கூடிய மக்கள் இயக்கமொன்றினை கட்டியெழுப்புதல் அவசியமானதொன்றாகும். இந்த பின்னணியில் சிவனு லட்சுமணனின் வீர நினைவுகள் நினைவுக் கூரப்பட வேண்டும். இத்தகைய பின்னணியில் சிவனு லட்சுமணனை நினைவு கூறுவோமாக.

# உலகத் தொழிலாளர் தினத்திற்கு வித்திட்ட தலைவர்கள்



Samuel Fielden



Albert Parsons



Louis Lingg



August Spies



Michael Schwab



Adolph Fischer



George Engel

தனிச் சுற்றுக்கு மட்டும். மலையக சமூக ஆய்வு மையத்தினால் வெளியிடப்பட்டது.